




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 177 | 4 Pages | 25.01.2026 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 177 | 4 பக்கங்கள் | 25.01.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை**
**தீரா இடும்பை தரும்**

**விளக்கம்:**
மற்றவனைஒன்றும்ஆராயாமல்தெளிந்தால் அஃது (அவனுக்கு மட்டும் அல்லாமல்) அவனுடைய வழிமுறையில் தோன்றின வருக்கும் துன்பத்தைக் கொடுக்கும்.

# சாதனை மேல் சாதனை படைப்பதுதான் திராவிட மாடல் அரசு மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஜன.24

சட்டமன்றத்தில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலுரையில் பேசியதாவது;

ஆட்சி பொறுப்பு

"2021ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக வெற்றி பெற்ற போது, ஒரு பக்கம் மகிழ்ச்சி இருந்தாலும், இன்னொரு பக்கம் எனக்கு கவலையும் இருந்தது. அதை நான் மறைக்க விரும்பவில்லை. இந்தப் பொறுப்பை நான் எப்படி செய்யப் போகிறேன்? வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா? மக்கள் விரும்பக்கூடிய வகையில் ஆட்சி நடத்த முடியுமா? மக்கள் மகிழ்ச்சியடையும் வகையில் ஆட்சி நடத்த முடியுமா? என்ற கவலைதான் எனக்கு இருந்தது.

முந்தைய பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் தமிழ்நாடு அனைத்து வகையிலும், அனைத்து துறையிலும் மிக மோசமான பின்னடைவை சந்தித்து, மோசமான நிலையை அடைந்திருந்தது. அதை சரி செய்தாகணும். அடுத்து நமக்கு மேலே இருக்கக்கூடிய ஒன்றிய அரசு, அது ஒத்துழைக்காத ஒரு ஓரவஞ்சனை அரசாக இருந்தது. இந்த ரெண்டு நெருக்கடிகளையும் எதிர்கொள்ளணும் என்பதுதான் எனது கவலைக்கு மிக முக்கியமான காரணமாக அமைந்தது. 'இடியாப்பச் சிக்கல்'னு சொல்லுவாங்க, அப்படியான சூழல்ல தான் நாங்க ஆட்சிக்கு வந்தோம். அதனால்தான் கவலை கொண்டவனாக நான் இருந்தேன்.

ஆனா இப்போ, 5 ஆண்டுகள் கடந்த நிலையில் நான் சொல்றேன், நான் மிக மகிழ்ச்சியா இருக்கேன். இன்னும் சொன்னா மிக மிக மகிழ்ச்சியா இருக்கேன். என்னுடைய மகிழ்ச்சிக்கு காரணம், மக்கள் மகிழ்ச்சியா இருக்காங்க. என்னுடைய இலக்குல நான் வென்று விட்டேன். திராவிட மாடல் அரசின் சாதனைகளால தமிழ்நாடு தலைநிமிர்ந்துடுச்சு. மக்கள் மனநிறைவு அடையும் வகையில் ஆட்சியை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இன்னைக்கு தமிழ்நாடு மத்த மாநிலங்களை விட அதிகம் வளர்ந்திருக்கு. இந்தியாவின் மத்த மாநிலங்கள் எல்லாம் தமிழ்நாட்டை அண்ணாந்து பார்க்கிறாங்க. அதுக்கு காரணம் நம்முடைய திட்டங்கள். நாம செஞ்சிட்டு இருக்கக்கூடிய சாதனைகள் இதெல்லாம்தான் என் மகிழ்ச்சிக்கு காரணம். அடுத்து இன்னும் பெருமையோட, கான்பிடென்ட்டா (CONFIDENT) சொல்றேன், நாங்க அமைக்கப்போற 'திராவிட மாடல் 2.0' ஆட்சி, எங்க சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவுக்கு இருக்கும்.

திமுக அரசின் சாதனைகள்

ஆட்சி பொறுப்பேற்றதும் நான் போட்ட முதல் கையெழுத்தே, மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணத்துக்குத்தான். இந்தப் பயணங்களால நாள்தோறும் 800 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை ஒவ்வொரு மகளிரும் சேமிக்கிறாங்க. இதன் மூலமா 2021 மே மாசத்துல இருந்து இப்ப வரை தோராயமா 60,000 ரூபாய் வரை சேமிச்சிருக்காங்க. பெண்களுக்கான மிகப்பெரிய சமூக பொருளாதார பலத்தை இந்தத் திட்டம் வழங்கியிருக்கு.



அடுத்து 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்'. ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் தோறும் 1000 ரூபாய் உரிமைத்தொகை வழங்குகிறோம். இந்தத் திட்டத்துல இதுவரைக்கும் ஒவ்வொரு மகளிருக்கும் 29,000 ரூபாயை கொடுத்திருக்கிறோம். அந்தப் பெண்கள் எல்லாரும் 'எங்க அண்ணன் கொடுக்கிற மாதாந்திர சீர்'னு பெருமையோடு சொல்றாங்க.

அரசு ஊழியர்கள்.. அந்த அரசு ஊழியர்களுடைய 23 ஆண்டுகால கோரிக்கையான 'உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை' அறிவிச்சிருக்கிறோம். நாம ஆட்சிக்கு வந்தப்போ அரசு ஊழியர்களுக்கு 17 விழுக்காடாக இருந்த அகவிலைப்படியை, இப்போ 58 விழுக்காட்டின் அளவுக்கு உயர்த்தி வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகள்ல மகளிர் சுய உதவி குழுக்களுக்கு 1 லட்சத்து 34 ஆயிரம் கோடி ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டிருக்கு. 2 லட்சம் பேருக்கு கலைஞர் கனவு இல்லம் வீடுகள். 22 லட்சத்து 71 ஆயிரம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா.

4000 கோயில்களுக்கு குடமுழுக்கு. 8000 கோடி ரூபாய் மதிப்பிலான கோயில் சொத்துக்கள் எல்லாம் மீட்கப்பட்டிருக்கு. 12 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய தொழில் முதலீடுகள் ஈர்ப்பு. 'தாயுமானவர்' திட்டத்துல மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 27 லட்சத்து 55 ஆயிரம் பேருக்கு வீடு தேடி ரேஷன் பொருட்கள். 5700 கோடி ரூபாய் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக ஒதுக்கீடு.

சாதனைக்கு மேல் சாதனை

இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் ஒரு சாதனை செஞ்சா, அதை மிஞ்சுறதா இன்னொரு சாதனை வரும். அடுத்து அதை மிஞ்சுறதா மற்றொரு சாதனை வரும். இப்படி சாதனைக்கு மேல் சாதனை.. சாதனைகளை படைக்கிறதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு. இன்னையோட நான் பொறுப்பேற்று, இந்த அரசு பொறுப்பேற்று 1724 நாள் ஆகுது. இந்த 1724 நாட்கள்ல 8685 நிகழ்ச்சிகள்ல நான் கலந்துகிட்டு இருக்கேன். 15,117 அரசுக் கோப்புகள்ல கையெழுத்திட்டு இருக்கேன். சென்னையைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களுக்கு 173 முறை பயணத்தை நான் மேற்கொண்டிருக்கிறேன். அதுலயும் 71 மாவட்ட மாபெரும் அரசு நலத்திட்ட விழாக்கள்ல பங்கேற்று 44 லட்சத்து 44 ஆயிரத்து 721 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறேன். அது இல்லாம அடிக்கல் நாட்டுனது, முடிவுற்ற திட்டப் பணிகளை தொடங்கி வைத்ததுனு எல்லாத்தையும் புள்ளிவிவரத்தோட என்னால சொல்ல முடியும்.

எதிராக செயல்படும் கவர்னர்

ஆனா தமிழ்நாட்டிற்காக, தமிழ்நாட்டினுடைய நலனுக்காக செயல்பட வேண்டிய ஆளுநர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு எதிரா, மக்களுக்கு பாடுபடக்கூடிய நமக்கு எதிரா தொடர்ந்து செயல்படுவதுதான் நமக்கு உள்ளபடியே வேதனையா இருக்கு. ஆளுநர் உரை தொடங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்து பாடுறதும், முடிவுறும் போது நாட்டுப்பண் பாடுறதும்தான் தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய மரபு. முதலிலேயே நாட்டுப்பண் பாடவில்லை என்பதை திரும்பத் திரும்ப குற்றச்சாட்டா அவர் சொல்லிட்டு வர்றாரு. இந்த நாட்டின் மீதும், நாட்டுப்பண் மீதும் அளவற்ற பெருமதிப்பை, மரியாதையை கொண்டுள்ளவர்கள் நாங்கள். தேசிய ஒருமைப்பாட்டிலேயும், நாட்டுப்பற்றிலேயும் யாருக்கும் குறைந்தவர்கள் அல்ல நாங்கள் என்பதை இந்தப் பேரவை உறுப்பினர்கள் சார்பா ஆளுநர் அவர்களுக்கு அழுத்தம் திருத்தமா நான் சொல்லிக்க விரும்புறேன்.

யாரும் எங்களுக்கு தேசபக்தி குறித்து பாடம் எடுக்கிற நிலையில நாங்களும் இல்ல. தேசபக்தி பாடம் எடுக்கக்கூடிய அளவுக்கு இந்த தேசத்துக்காக அவங்க போராடியவங்களும் இல்ல. ஜனநாயக தேசத்தின் அரசியலமைப்பு மாண்பை எதேச்சதிகாரத் தன்மையோட மாற்ற நினைப்பவர்கள் தான், இந்தக் காலகட்டத்துல தேசவிரோதிகள், அவங்க யாருன்னு நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும். இது பேறறிஞர் பெருந்தகை அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும், இன்னும் சொன்னால் மக்கள் திலகம் எம்ஜிஆரும், அம்மையார் ஜெயலலிதா அவர்களும் எதிர்கொள்ளாத நெருக்கடி இது. அவங்க காலத்துல இருந்த ஆளுநர்கள் கூட இப்படி இல்ல. ஆனா முரண்பாடுகள் இதயத்தில் இருந்தாலும், அதை ரணமாக்கும் வகையில் செயல்பட்டது இல்ல. அந்த வகையில் அளவுக்கு அதிகமான சோதனைகளை எதிர்கொண்டவனாக நான் நின்றுகொண்டிருக்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

## சிவசேனாவை பா.ஜ.க.வால் அழிக்க முடியாது உத்தவ் தாக்கரே



மும்பை, ஜன.25

30 ஆண்டுகளாக மும்பை மாநகராட்சியில் ஆதிக்கம் செலுத்தி வந்த தாக்கரே குடும்பத்திடம் இருந்து பா.ஜனதா அந்த மாநகராட்சியை கைப்பற்றியுள்ளது. மொத்தம் உள்ள 227 வார்டுகளில் பா.ஜனதா 89 இடங்களிலும், சிவசேனா (ஏக்நாத் ஷிண்டே) 29 இடங்களிலும் வெற்றி பெற்றன. உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனாவுக்கு 65 இடங்களும், அதன் கூட்டணியில் உள்ள ராஜ் தாக்கரேவுக்கு 3 இடங்களும் கிடைத்தன.

இந்த நிலையில், சிவசேனாவை பா.ஜனதாவால் அழிக்க முடியாது என்று உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார். பால் தாக்கரேயின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் இதுதொடர்பாக பேசியதாவது:–சிவசேனா (உத்தவ் தாக்கரே) ஒரு கட்சி மட்டுமல்ல; அது ஒரு சித்தாந்தம் நிறைந்த இயக்கம். அதை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று பா.ஜ.க. நினைத்தால் அது தவறு. எங்களை பா.ஜனதாவால் ஒருபோதும் அழிக்க முடியாது. சிவசேனா இல்லை என்றால் பா.ஜ.க. ஒருபோதும் மும்பை மாநகராட்சியையோ அல்லது மாநிலத்தையோ கைப்பற்றியிருக்க முடியாது.

உள்ளாட்சி தேர்தலில் முதல் முறையாக பணபலத்தின் பயன்பாடு அதிகரித்தது. வாக்காளர் பட்டியல் குறைபாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் சந்தித்தன. மும்பை மாநகராட்சி தேர்தல் முடிவுகள் நாங்கள் விரும்பியபடி இல்லாவிட்டாலும், நாங்கள் வலுவான எதிர்க்கட்சியாக உள்ளோம். சிவசேனா அதிகாரம் பெறுவதற்காக தொடங்கப்பட்ட இயக்கம் அல்ல. மராட்டிய மக்களின் உரிமைகளுக்காக போராடுவதற்காகவே அது தொடங்கப்பட்டது.

மகாராஷ்டிர மாநிலத்தில் மராத்தி அல்லாத கலாச்சாரத்தை திணிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. 1ம் வகுப்பு முதல் பள்ளிகளில் இந்தியை கட்டாயமாக்கும் முடிவு (பின்னர் திரும்ப பெறப்பட்டது) இந்த சதியின் ஒரு பகுதியாகும். சிவசேனா தொண்டர்களால் பொதுவாக பயன்படுத்தப்படும் 'ஜெய் மராட்டியம்' என்ற முழக்கத்திற்கே தற்போது ஆபத்து ஏற்பட்டுள்ளது. அனைவரும் அதை ஒரு வாழ்த்துச் சொல்லாக பயன்படுத்த வேண்டும். இவ்வாறு உத்தவ் தாக்கரே பேசினார்.

## பீகாரில் 20 ஆண்டுகளில் 70 ஆயிரம் படுகொலைகள்; ராஷ்டீரிய ஜனதா தளம் பரபரப்பு குற்றச்சாட்டு



பாட்னா, ஜன.25


பீகாரில் ஐக்கிய ஜனதா தள கட்சியை சேர்ந்த, முதல்மந்திரி நிதிஷ் குமார் தலைமையிலான ஆட்சி நடந்து வருகிறது. கூட்டணியில் பா.ஜ.க. உள்ளது. இந்தநிலையில், பாட்னா நகரில் செய்தியாளர்களிடம் பேசிய ராஷ்டீரிய ஜனதா தள கட்சியின் தலைவர்களில் ஒருவரான சஞ்சய் யாதவ், நிதிஷ் குமார் ஆட்சியை கடுமையாக விமர்சித்து உள்ளார்.

அவர் கூறும்போது, பீகாரில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது. கடந்த 2 தசாப்தங்களில் (20 ஆண்டுகளில்) 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படுகொலைகள் நடந்துள்ளன என பரபரப்பு குற்றச்சாட்டை கூறியுள்ளார். பீகாரில் எத்தனை சி.சி.டி.வி. கேமராக்கள் உள்ளன?

அவர்களுடைய காவல் நிலையத்தில் சி.சி.டி.வி. கேமராக்கள் கூட இல்லை. ஆனால், தேர்தலின்போது ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ.10 ஆயிரம் கொடுக்கின்றனர் என்றார்.

அக்கட்சியின் தலைவர் தேஜஸ்வி யாதவ் கடந்த வாரம் பேசும்போது, மாதேபுரா, ககாரியா மற்றும் பாட்னா நகரங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் குற்றவாளிகளை பாதுகாக்கும் வகையில் நிதிஷ் அரசு செயல்படுகிறது என்று குற்றச்சாட்டாக கூறினார்.

## கர்நாடக சட்டசபை கட்டிடம் முன் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்ற டாக்டரால் பரபரப்பு




கர்நாடகாவில் சட்டசபை (விதான் சவுதா) அமைந்துள்ள கட்டிடத்திற்கு முன் டாக்டர் ஒருவர் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்ற சம்பவம் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

டாக்டர் நாகேந்திரப்பா ஷிரூர் (வயது 38) என்பவர் விதான் சவுதாவுக்கு முன் வந்து, பொதுமக்கள் பலர் முன்னிலையில் திடீரென விஷ பாட்டிலை திறந்து அதனை வாயில் ஊற்றி தற்கொலை செய்து கொள்ள முயன்றுள்ளார். இதனை பார்த்த பலரும் அதிர்ச்சி அடைந்தனர்.

எனினும் சம்பவத்தின்போது, காவல் பணியில் ஈடுபட்டு இருந்த போலீசார் அதனை கவனித்து, உடனடியாக ஓடி போய் அதனை பறித்தனர். அவரை மீட்டு, அவசர சிகிச்சைக்காக பவ்ரிங் அண்ட் லேடி கர்சன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவர் சிகிச்சைக்கு பின்னர் உடல்நலம் தேறி வருகிறார். வலதுசாரி செயற்பாட்டாளரான புனீத் கெரேஹள்ளி என்பவருடன் சேர்ந்து அனேகல் காவல் நிலையம் முன் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக டாக்டர் நாகேந்திரப்பாவுக்கு எதிராக ஏற்கனவே வழக்கு ஒன்று பதிவாகி உள்ளது. இதுதொடர்பாக நடந்த விசாரணையில், தொடர்ந்து கேள்வி கேட்டு துன்புறுத்தினர் என்றும் இதனால், கடுமையான மனஅழுத்தம் ஏற்பட்டு இந்த தற்கொலை முடிவை எடுத்துள்ளார் என்றும் தெரிகிறது. இதனை அவர் குற்றச்சாட்டாக கூறியுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக விதான் சவுதா போலீசார், டாக்டருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ரியாத்தில் புதிய 'டிஜிட்டல் மற்றும் ஃபிலிம் புதுப்பிக்கும் மையத்தை' தொடங்கியது பிரசாத் மற்றும் 'வேர்ல்ட் சவுண்ட் & விஷன்'

கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக திரைப்படங்களைப் பாதுகாப்பதிலும், திரைப்படத் தயாரிப்புக்குப் பிந்தைய பணிகளிலும் உலக அளவில் முன்னணியில் இருக்கும் இந்தியாவின் 'பிரசாத்' நிறுவனம், சவுதி அரேபியாவின் 'வேர்ல்ட் சவுண்ட் & விஷன்' (WSV) நிறுவனத்துடன் இணைந்து, ரியாத் நகரில் 'பிரசாத் WSV டிஜிட்டல் மற்றும் ஃபிலிம் புதுப்பிக்கும் மையத்தை' தொடங்கியுள்ளது.

'வேர்ல்ட் சவுண்ட் & விஷன்' நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் கோட்அப் சலே அவர்களின் தொலைநோக்குப் பார்வையில், பிரசாத் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இந்தத் திட்டம் உருவாகியுள்ளது. சவுதி அரேபியாவின் 'விஷன் 2030' திட்டத்தின் ஒரு பகுதியாக இது அமைந்துள்ளது. நாட்டின் கலாச்சாரத்தை மேம்படுத்துவதோடு, ஊடகத் துறையில் புதிய முயற்சிகளுக்கும், வரலாற்றைப் பாதுகாப்பதற்கும் ஒரு முக்கிய இடமாக சவுதி அரேபியாவை இது உயர்த்தும்.




பிரசாத் நிறுவனத்தின் இயக்குனர் & CTO திரு. அபிஷேக் பிரசாத் இது பற்றி கூறியதாவது: "வேர்ல்ட் சவுண்ட் & விஷன் உடனான இந்தக் கூட்டணி மூலம், பிரசாத் நிறுவனத்தின் 70 ஆண்டுகால அனுபவத்தை சவுதி அரேபியாவிற்குக் கொண்டு வருவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

ரியாத்தில் உள்ள இந்த புதிய மையம் வெறும் தொழில்நுட்பக் கூடம் மட்டுமல்ல; இது வருங்காலத் தலைமுறையினருக்காக நம் கலாச்சாரப் பொக்கிஷங்களைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியாகும். சவுதி அரேபியாவின் 'விஷன் 2030' திட்டத்தை வழிகாட்டியாகக் கொண்டு, வரலாற்றைப் பாதுகாப்பதில் சவுதி அரேபியா உலக அளவில் ஒரு தலைவராக உருவெடுக்கும் பயணத்தின் தொடக்கமாக இதை நாங்கள் பார்க்கிறோம். என்றார்.




தினகனி



# "தமிழ்நாட்டின் எதிர்கால அரசியல் ஹீரோ விஜய்" செங்கோட்டையன்



சென்னை, ஜன.25

பல்வேறு கட்சியில் இருந்த 500 பேர் இன்று தவெகவில் தன்னை இணைத்துக்கொண்டனர். இந்த நிகழ்ச்சி பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் பேசிய செங்கொட்டையன் தமிழ்நாட்டின் எதிர்கால அரசியல் ஹீரோ விஜய் தான் என கூறினார். மேலுல் அவர் பேசியதாவது:

நேற்றைய தினம் பாஜக நிகழ்ச்சி நடைபெற்றது. 1000 ரூபாய் வழங்கிய பின்புதான் கூட்டம். கூட்டத்திலே கர ஓசை கிடையாது. ஆனால் நான் இங்கே வருகிறபோது தான் பார்த்தேன். நீங்கள் அடிக்கின்ற விசிலை பார்க்கும்போது ஒரு ரூபாய் கூட சிந்தாமல் சிதராமல் நீங்களே செலவு செய்து வந்துள்ளீர்கள். யாரைப் பற்றியும் நீங்கள் கவலைப்படவில்லை, நீங்களே செலவு செய்து நீங்களே இங்கு வருகிறீர்கள். 1000 ரூபாயும் கொடுத்து பிரியாணியும் கொடுத்து அதற்குப் பிறகு தூங்கிக்கொண்டிருக்கும் கூட்டத்தை நேற்று நான் பார்த்தேன். அதற்கும் இதற்கும் உள்ள வேறுபாடுகள் இதுதான்.

விஜய் கை காட்டுபவரே சட்டமன்ற உறுப்பினர். அதனை யாராலும் மாற்றிக் காட்ட முடியாது. திரைப்படத்தில் அவர் ஹீரோ. எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் அரசில் ஹீரோவாகவும் அவர்தான் வரப்போகிறார். அதனை யாராலும் மாற்ற முடியாது.

பணம் இல்லாமலேயே வெற்றிபெறக்கூடிய இயக்கம் தான் நம்முடைய தளபதி இயக்கம். எங்கே சென்று கேட்டாலும் அவருக்குத்தான் ஓட்டு. நேற்றைய பாஜக 5 லட்சம் பேர் வருவார்கள் என்று சொன்னார்கள், ஆனால் 60 ஆயிரம் சேர் தான் போட்டார்கள். 10 ஆயிரம் சேர் காலி. 20 ஆயிரம் பேர் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஒருத்தரும் கை தட்டவில்லை.

எல்லோருக்கும் எல்லா பதவிகளும் கிடைக்கும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும். எல்லோரும் எல்லாம் பெறவேண்டும். எல்லோரும் பொருளாதாரத்தில் உயர வேண்டும். சமநிலை தமிழ்நாட்டில் உருவாக வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# இடைநிலை ஆசிரியர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்; அரசுக்கு டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஜன.25

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2009மே மாதம் 31052009 தேதி வரை நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கும், ஜூன் 1ம் தேதிக்கு பிறகு நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கும் இடையே அடிப்படை ஊதியத்தில் ரூ.3,170 ஊதிய முரண்பாடு நிலவுகிறது. இதனால் 2009ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு ரூ.16 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை குறைவான ஊதியம்தான் அளிக்கப்படுகிறது.

200611ம் ஆண்டு காலத்தில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் தான் மக்கள் நலப்பணியாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி போல இடைநிலை ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டது. பின்னர் 16 ஆண்டுகளை கடந்தும் இந்த அநீதி துடைக்கப்படவில்லை. இந்த அநீதியை களைய வேண்டும்; சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி 2009ம் ஆண்டு மே மாதத்திற்கு பிறகு நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் கடந்த டிசம்பர் 26 முதல் சென்னையில் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

போராட்டம் நடத்தும் ஆசிரியர்களை கைது செய்து அடைத்து வைப்பது, போராடும் ஆசிரியர்களை கைது செய்து இரவு நேரங்களில் சென்னைக்கு வெளியில் வெகுதொலைவில் கொண்டு சென்று இறக்கி விடுவது என தி.மு.க. அரசு ஈடுபட்டு வருகிறது. டிசம்பர் 26ம் தேதி இடைநிலை ஆசிரியர்கள் போராட்டத்தை தொடங்கியபோது, பள்ளிகளுக்கு அரையாண்டு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. அதனால், ஆசிரியர்களின் போராட்டத்தால் மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால், அரையாண்டு விடுமுறை முடிந்து ஜனவரி 5ம் தேதி பள்ளிகள் திறக்கப்பட்டு விட்டன. அதன்பின் நடக்கும் போராட்டத்தால் அரசு பள்ளி மாணவர்களின் கல்வி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலங்களில் ஆசிரியர்களின் வேலை நிறுத்தம் இவ்வளவு நாள்கள் நீடித்ததில்லை; மாணவர்களின் படிப்பும் இந்த அளவுக்கு பாதிக்கப்பட்டதில்லை. இன்னும் ஒரு மாதத்தில் ஆண்டு தேர்வுகள் நடைபெறவுள்ள நிலையில், ஆசிரியர்களின் போராட்டம் நீடித்தால் மாணவர்கள் மேலும் மோசமாக பாதிக்கப்படுவார்கள்.

ஆனால், இதுகுறித்த எந்த கவலையும் தி.மு.க. அரசுக்கு இல்லை. ஒருபுறம் ஆசிரியர்களுக்கு அநீதி தொடர்கிறது; இன்னொருபக்கம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது எனும் போது, ஆசிரியர்களுடன் பேச்சு நடத்தி சிக்கலுக்கு தீர்வு காண்பதுதான் மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசின் கடமையாக இருக்க முடியும். ஆனால், 25ஆம் நாளாக போராட்டம் நீடிக்கும் போதிலும், ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள தி.மு.க. அரசு மறுத்து வருகிறது. இது தொடர்பாக பல முறை பேச்சுகள் நடத்தப்பட்ட போதிலும், ''நிதி நிலை சரியானவுடன் ஆசிரியர்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்'' என்பதையே அரசு மீண்டும், மீண்டும் கூறி வருகிறது. இதை ஏற்றுக் கொள்ள ஆசிரியர்கள் தயாராக இல்லை. அவர்களின் நிலைப்பாடு சரியானதும் கூட.

சென்னையில் கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் 28ம் தேதி முதல் அக்டோபர் 6ம் தேதி வரை போராட்டம் நடைபெற்றது. அதையடுத்து ஆசிரியர்களுடன் பேச்சு நடத்திய அமைச்சர்கள் குழுவினர், ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடு கோரிக்கை தொடர்பாக ஆலோசித்து அறிக்கை தாக்கல் செய்ய 3 உறுப்பினர் குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும், அந்த குழு அடுத்த 3 மாதங்களில் தாக்கல் செய்த பின், அதனடிப்படையில் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்தனர்.

ஆனால், அதன்பின் 3 ஆண்டுகளாகும் நிலையில் அறிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை; ஆசிரியர்களின் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை. இப்படிப்பட்ட அரசின் வெற்று வாக்குறுதிகளை ஏற்க மறுக்கும் இடைநிலை ஆசிரியர்கள், தங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் மட்டும்தான் போராட்டத்தை கைவிடுவோம் என்பதில் உறுதியாக உள்ளனர். மாணவர்களின் கல்வி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்த விவகாரத்தில் தி.மு.க. அரசு இனியும் அலட்சியம் காட்டக்கூடாது. அடக்குமுறைகள் மூலம் ஆசிரியர்களை பணிய வைத்து விடலாம் என்ற மனப்பான்மையை கைவிட்டு, இடைநிலை ஆசிரியர்களின் சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோரிக்கையை நிறைவேற்றி அவர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# கோவையில் அமைந்துள்ள ஏ ஜே கே கல்வி நிறுவனங்கள் டாக்டர் லால் மோகன் நினைவாக சிறந்த கல்வியாளர் விருது




கோவையில் அமைந்துள்ள ஏ ஜே கே கல்வி நிறுவனங்கள் டாக்டர் லால் மோகன்நினைவாக சிறந்த கல்வியாளர் விருது 2026 ஐ நவகரையில் அமைந்துள்ள ஏ ஜே கே கல்லூரியில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு டாக்டர் நாராயணன் விண்வெளி ஆணையத்தின் தலைவர் மற்றும் விண்வெளித் துறையின் செயலாளர், இஸ்ரோ தலைவர், புது தில்லி அவர்கள் தலைமை யேற்க, டாக்டர் ஜோ கே. கிழகூடன், முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர், எம்.எஃப்.ஆர்.ஐ, விசாகப்பட்டினம் பிராந்திய மையம் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், ஏஜேகே கல்வி நிறுவனங்களின் குழுமத்தின் தலைவர் மற்றும் செயலாளர் பேராசிரியர்டாக்டர்அஜித் குமார்லால் மோகன் அவர்கள் முன்னிலை வகித்தனர். இதில் சிறந்த கல்வி நிறுவனங்கள், முதல்வர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள், படைப்புத்திறனில் சிறந்த ஆசிரியர்களை தேர்வு செய்து விருதுகளை வழங்கி கௌரவித்தனர். தமிழ்நாடு பாண்டிச்சேரி கேரளா ஆந்திரா கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் கோவை மாவட்டம் பெரிய நாயக்கன் பாளையம், தூமனூர் பள்ளியில் கணித ஆசிரியராகப் பணியாற்றி வரும் வசந்தகுமார் அவர்களுக்கு சிறந்த ஆசிரிய படைப்பாளர் விருது 2026 வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதில் பல்வேறு கல்லூரிகளை சார்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு மாணவர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு விருது பெற்றவர்களை வாழ்த்தினார்கள் .

# ஜனநாயகன் விவகாரத்தில் சட்டம் தன் கடமையை செய்கிறது: பிரேமலதா



சென்னை, ஜன.25

தேமுதிகவின் கூட்டணி நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு இது வரை பதில் கிடைக்கவில்லை. கடலூர் மாநாட்டில் யாருடன் கூட்டணி என்பதை அறிவிப்பதாக சொன்ன பிரேமலதா அன்றைய தினம் சஸ்பென்ஸ் வைத்துவிட்டு சென்றார். இந்த நிலையில் சென்னை விமான நிலையத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில் கூறியதவாது: சட்டசபைத் தேர்தல் அறிவிப்புக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது. யாரும் வேட்பாளர்கள் பட்டியலை வெளியிடவில்லை. பிப்ரவரி 20ஆம் தேதிக்கு பின்னரே தேர்தல் தேதி அறிவிக்கப்படும்.

தேமுதிக எங்களின் குழந்தை.. அதனால் ஒரு அம்மாவாக தேமுதிகவுக்கு என்ன செய்ய வேண்டுமென நன்றாக தெரியும்.. உரிய நேரத்தில் நல்ல முடிவு எடுத்து கூட்டணியை அமைப்போம். எந்த ரகசியமும் கிடையாது. இம்முறை வெளிப்படையாகவே கூட்டணி பேச்சுவார்த்தையை செய்கிறோம். என்டிஏ கூட்டணி உட்பட இன்னும் எந்த கூட்டணியும் முழு வடிவம் பெறவில்லை. அங்கும் இன்னும் சில கட்சிகள் இணைவதற்கான பேச்சு வார்த்தை நடக்கிறது. அரசியலில் எதுவும் நடக்கலாம். நல்லதே நடக்கும்"

அதேபோல விஜய்யின் ஜனநாயகன் பட விவகாரம் குறித்து பேசிய பிரேமலதா விஜயகாந்த், "ஜனநாயகன் விவகாரத்தில் சட்டம் தன் கடமையை செய்கிறது; விஜய்யை மிரட்டும் வகையில் இது நடைபெறுகிறதா என்றால், பதில் விஜய்யின் மனதில் தான் உள்ளது" என்றார்.

# அரசு இலவசமாக வழங்கும் ரேஷன் அரிசியை அமைச்சர்கள் சாப்பிடுவார்களா.? சீமான்



சென்னை, ஜன.25

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், சென்னை தாம்பரத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

"வெற்றியையும் தோல்வியையும் சமமாகக் கருதுபவன்தான் வீரன். வெற்றியடைந்தால் இருப்பேன்.. தோல்வியடைந்தால் சென்றுவிடுவேன்என்பவன்கோழை. எங்களுக்கு தெரியாத மூன்றெழுத்து பயம். எங்கள் பரம்பரைக்கே தெரிந்த மூன்றெழுத்து வீரம். 60 ஆண்டுகளாகியும் தலைநகரில் மழை வெள்ளம் வடிய ஏற்பாடு செய்யவில்லை. அரசு இலவசமாக வழங்கும் ரேஷன் அரிசியை எந்த அமைச்சர்கள் சாப்பிடுவார்கள்?

எனக்கு போட்டியாக இந்தியாவில் எந்த கட்சியும் இல்லை. பூமிக்காக அரசியல் பேசும் ஒரே தலைவன் நான் தான். மீனம்பாக்கம் விமான நிலையம் என்பது தேவை. பரந்தூரில் விமான நிலையம் கட்ட வேண்டும் என்பது பேராசை. அடர்த்தியான வறுமை, அறியாமை எனும் குழந்தையைப் பெறுகிறது. வறுமையும் அறியாமையும் சேரும் போது மறதி வருகிறது. இவை மூன்றும் இப்போதிருக்கும் அரசியல்வாதிகளுக்கு முதலீடாக மாறி விடுகிறது. கட்சி மாறுபவர்களைப் பார்த்து மக்கள் கேள்வி கேட்பதில்லை. "

இவ்வாறு அவர் பேசினார்.

# குற்றவாளிகளை காப்பாற்ற மட்டுமே திமுக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது அண்ணாமலை



சென்னை, ஜன.25

தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

சேலம் மேச்சேரி பேருந்து நிலையம் அருகே, திமுக நிர்வாகி பிரசாந்த், அவரது அம்மா மற்றும் சகோதரர் சட்ட விரோதமாக 24 மணி நேரமும் மதுபானம் விற்பனை செய்து வருகின்றனர். இதுகுறித்து புகார் அளித்தும், "நான் அமைச்சர் ஆள், ஆட்சி எங்களுடையது" என்று கூறி காவல்துறை அதிகாரிகளை மிரட்டுவதால், மேச்சேரி காவல்துறை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாக கூறப்படுகிறது.

திமுக நிர்வாகிகள், சட்டத்தையும், காவல் துறையையும் அச்சுறுத்துவது சாதாரணமாகி விட்டது. திமுக ஆட்சியில், சட்டம், திமுகவினரின் முறைகேடான செயல்பாடுகளுக்கே துணை நிற்கிறது.

திமுக கட்சியில் இருந்தால், என்ன குற்றம் செய்தாலும் நடவடிக்கை இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இது திமுக ஆட்சியில் நடைபெறும் அதிகார துஷ்பிரயோகத்தின் மற்றுமொரு உதாரணம். குற்றவாளிகளை காப்பாற்ற மட்டுமே திமுக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது.

சேலம் மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும், உடனடியாக இந்த சட்ட விரோத மது விற்பனையைத் தடுத்து நிறுத்த வேண்டும். பொதுமக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவே சட்டமும், காவல்துறையும். ஆளுங்கட்சியினரின் முறைகேடுகளுக்குத் துணைநிற்பதற்கு அல்ல.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பெண் குழந்தைகளின் கனவுகளுக்கு சிறகு கொடுப்போம்: தவெக வாழ்த்து



சென்னை, ஜன.25

தவெக கொள்கைப் பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

பெண் குழந்தை என்பது மென்மையின்அடையாளம் மட்டுமல்ல, அது சக்தியின் மறுஉருவம்!அவளுக்கு கல்வியெனும் ஆயுதத்தையும், அன்பெனும் அரவணைப்பையும் கொடுங்கள். அவள் இந்த உலகத்தையே வெல்வாள்!

வீட்டிற்கு ஒரு பெண் குழந்தை, நாட்டின் நாளைய நம்பிக்கை!அன்பால் அரவணைப்போம், அறிவால் உயர்த்துவோம். பெண் குழந்தைகளின் கனவுகளுக்கு சிறகு கொடுப்போம்!அனைவருக்கும் தேசிய பெண் குழந்தைகள் தின வாழ்த்துகள். என தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் நேரு வழக்கு: ஆதாரங்களை ஒப்படைக்க டிஜிபிக்கு ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஜன.25

நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் பணியாளர்களை நியமிப்பதில பல நூறு கோடி லஞ்சம் கைமாறியுள்ளதாக வந்த புகாரை ஆதாராங்களுடன் மத்திய அமலாக்கத் துறை தமிழக டி.ஜி.பிக்கு அனுப்பி, வழக்கு பதிவு செய்ய கோரியும் இது வரை தமிழக போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளதால், உடனடியாக வழக்கு பதிய உத்தரவிடக் கோரி அ.தி.மு.க. எம்பி ஐ.எஸ்.இன்பதுரை சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், அமலாக்கத்துறை அனுப்பிய கடிதத்தின் மீது முதல் கட்ட விசாரணை நடந்துக் கொண்டிருக்கிறது என்றார். இதற்கு தலைமை நீதிபதி ஏன் இன்னும் வழக்கு பதிவு செய்யவில்லை என்று கேள்வி எழுப்பினார். அதற்கு அரசு தரப்பில் மனுதாரர் இன்பதுரை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மனுதாக்கல் செய்துள்ளார் என்று தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், அரசியல் காழ்ப்புணர்ச்சி பற்றியெல்லாம் நாங்கள் பார்ப்பதில்லை, வழக்கின் தன்மையை பார்க்கிறோம்.. தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யும்படி எங்களால் இப்போதே உத்தரவிட முடியும். ஆனால் போதிய அவகாசம் வழங்க வேண்டும் என்பதால் வரும் 28ந் தேதிக்குள் எழுத்து பூர்வமாக பதில் மனு தாக்கல் செய்ய அரசுக்கு அவகாசம் அளிப்பதாக கூறினர். மேலும் அமலாக்கத் துறை டி.ஜிபி.க்கு அனுப்பிய ஆதாரங்களை 28ம் தேதிக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவு பிறப்பித்த நீதிபதிகள் விசாரணையை வரும் 28நதேதிக்கு ஒத்திவைத்தனர்.

# புலிகள் கணக்கெடுப்பு பணி நிறைவு: மணிமுத்தாறு, அகஸ்தியர் அருவிகளுக்கு செல்ல அனுமதி



நெல்லை, ஜன.25

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் வனக்கோட்டத்தில் கடந்த 19ந்தேதி முதல் அகில இந்திய புலிகள் கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. இதனால் மணிமுத்தாறு, அகஸ்தியர் அருவிகள், சொரிமுத்து அய்யனார் கோயில் உள்ளிட்ட இடங்களுக்குச் செல்ல சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், 6 நாள்கள் நடைபெற்ற புலிகள் கணக்கெடுப்புப் பணிகள் இன்று காலையுடன் நிறைவு பெற்றன. இதையடுத்து இன்று காலை 10 மணி முதல் பாபநாசம், மணிமுத்தாறு சோதனைச் சாவடிகள் திறக்கப்பட்டு மணிமுத்தாறு, அகஸ்தியர் அருவிகள், சொரிமுத்து அய்யனார் கோயில் உள்ளிட்ட பகுதிகளுக்கு சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

# பொது இடங்களில் அனுமதியின்றி மரங்கள் வெட்டிய 6 நபர்களுக்கு ரூ.1.75 லட்சம் அபராதம்



சென்னை, ஜன.25

பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பசுமைப்பரப்பினை அதிகரித்திடும் வகையில் பல்வகை மரக்கன்றுகள் நடப்பட்டும், குறுங்காடுகள் உருவாக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சி பொது இடங்களில் உள்ள மரங்களைப் பாதுகாத்திடும் வகையில் பொது இடங்களில் உள்ள மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அனுமதியின்றி வெட்டுபவர்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர் நடவடிக்கையாக, 22.01.2026 அன்று ஒருநாள் மட்டும் பொது இடங்களில் அனுமதியின்றி மரங்களை வெட்டிய நபருக்கு ரூ.1 லட்சம் அபராதமும், மரக்கிளைகளை வெட்டிய 5 நபர்களுக்கு தலா ரூ.15 ஆயிரம் வீதம் ரூ.75 ஆயிரம் அபராதம் என மொத்தம் ரூ.1.75 லட்சம் அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் மரங்களின் கிளைகளை அகற்றுதல், காய்ந்து போன மரங்களை அகற்றுதல், மாற்று இடங்களில் மரங்களை நடுதல் மற்றும் மரங்களை அகற்றுதல் உள்ளிட்ட சேவைகளை பொதுமக்கள் எளிமையாக பயன்படுத்துவதற்கும் காலதாமதத்தை குறைத்து துரித நடவடிக்கை மேற்கொள்ளும் வகையிலும், மரங்கள் அகற்றுதல் மற்றும் மரக்கிளைகள் அகற்றுதல் உள்ளிட்ட சேவைகள் வனத்துறை மூலமாக நேரடியாக விண்ணப்பித்த நிலையை மாற்றி, 12.01.2026 முதல் அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் HTTPS://CHENNAICORPORATION.GOV.IN/GCC/ என்ற இணையதளத்தில் பசுமைக் குழு போர்ட்டல் (GREEN COMMITTE APPLICATION) மற்றும் நம்ம சென்னை செயலி மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பெறப்பட்ட விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், சமூக ஆர்வலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் மூலமாக களஆய்வு மேற்கொள்ளப்பட்டு, களஆய்வின் ஆய்வறிக்கை பசுமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அதன் விவரம் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தியாக வாயிலாக அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், மாநகராட்சியின் இணையதளத்தின் வாயிலாகவும் விண்ணப்பதாரர்கள்விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உரிய அனுமதியின்றி பொது இடங்களில் மரங்களை வெட்டுபவர்களுக்கு ரூபாய் 1 லட்சம் அபராதமும், மரக்கிளைகளை வெட்டுதல், மரத்தில் ஆணி அடித்து விளம்பரப் பலகைகள் பொருத்துதல், மரங்களைச் சுற்றி விளக்குகள் பொருத்துதல் உள்ளிட்டவற்றிற்கு ரூபாய் 15 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது இடங்களில் உள்ள மரங்கள், மரக்கிளைகளை வெட்டுதல் தொடர்பாக மாநகராட்சியின் கட்டுப்பாட்டு அறை எண் 1913 தொலைபேசி வாயிலாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம். எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மரங்கள் அகற்றுதல் மரக்கிளைகள் அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மற்றும் நம்ம செயலில் மூலமாக பொதுமக்கள் விண்ணப்பித்திடவும், பொது இடங்களில் அனுமதியின்றி மரங்கள் மற்றும் மரக்கிளைகளை வெட்டுவதைத் தவிர்த்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# அடுத்தடுத்து விலகும் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள்: மீண்டும் அதிமுகவில் இணையும் எம்.பி.?



சென்னை, ஜன.25

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஒன்றுப்பட்ட அதிமுக என்ற கோஷத்தை முன்வைத்து அரசியல் நடத்தி வருகிறார். ஆனால் ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியிலோ,கூட்டணியிலோ சேர்த்துக்கொள்ள மாட்டோம் என்று எடப்பாடி பழனிசாமி அதிரடியாக அறிவித்தார்.

இதற்கிடையே சட்டசபை தேர்தலில் பாஜகவிடம் இருந்து கூட்டணி அழைப்பு வரும் என்று ஓ.பன்னீர்செல்வம் நம்பிக் கொண்டிருந்தார். ஆனால் அவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதற்கு, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தடையாக இருப்பதாக கூறப்படுகிறது. இதைத்தொடர்ந்து, ஓ.பன்னீர்செல்வம் அணியில் இருக்கும் முக்கிய தலைவர்கள் மாற்று கட்சிக்கு தாவி வருகிறார்கள். மனோஜ் பாண்டியன், சுப்புரத்தினம், மருது அழகுராஜ் மற்றும் வைத்திலிங்கம் ஆகியோர்ஓ.பன்னீர்செல்வம் அணியில் இருந்து விலகி சமீபத்தில் திமுகவில் சேர்ந்தனர். குன்னம் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ. ஆர்.டி.ராமச்சந்திரன் திமுகவில் இணையப்போவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், திடீரென அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளரானதர்மர் எம்.பி. அதிமுகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தர்மர் கடந்த 2022ம் ஆண்டு அதிமுக சார்பில் மாநிலங்களவை எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவர் அதிமுகவில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் நீக்கப்பட்ட பின்னர் அவருடன் கை கோர்த்து செயல்பட்டு வந்தார். இந்த நிலையில் இன்று மாலையில் தர்மர் எம்.பி. அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து மீண்டும் அதிமுகவில் இணைய உள்ளதாக கூறப்படுகிறது.

# மேட்டுப்பாளையம்-குன்னூர் இடையே நீராவி என்ஜின் சோதனை ஓட்டம்



ஊட்டி, ஜன. 25

நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் பலரும் மலை ரெயிலில் பயணம் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். பச்சை பசேல் என காணப்படும் தேயிலை தோட்டங்களுக்கு மத்தியில் குகைகள் வழியாக சென்று மலையின் இயற்கை அழகை ரசிப்பதற்காக மலை ரெயிலில் செல்கின்றனர். ஆசியாவில் தற்போதும் பல் சக்கரங்களில் இயங்கும் ஒரே மலை ரெயிலான இந்த மலை ரெயில் முதல் முறையாக குன்னூர்மேட்டுப்பாளையம் இடையே கடந்த 1899ம் ஆண்டு முதல் இயக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் நிலக்கரி மூலமாக இயக்கப்பட்டு வந்தது. அப்போது சுற்றுச்சூழல் மாசுபாடு, பேசுபொருளாக இருந்தது. இதனால் 2002ம் ஆண்டு பர்னஸ் ஆயில் மூலமாக இயக்கக்கூடிய வகையில் என்ஜின் மாற்றி வடிவமைக்கப்பட்டது.

இந்தநிலையில் எக்ஸ் கிளாஸ் நீராவி என்ஜின்கள் 3 முதல் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருச்சி பொன்மலை பணிமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதைத் தொடர்ந்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருச்சி பொன்மலை பணிமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நீலகிரி குயின் என அழைக்கப்படும் எக்ஸ் கிளாஸ் மலை ரெயில் நீராவி என்ஜினை பொலிவுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த என்ஜின் சமீபத்தில் ராட்சத லாரி மூலம் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் கொண்டு வரப்பட்டு, கிரேன்கள் மூலம் ரெயில் பாதையில் இறக்கி வைக்கப்பட்டது. இந்தநிலையில் மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூருக்கு சோதனை ஓட்டமாக புதுப்பொலி வுடன் நீராவி என்ஜின் இயக்கப்பட்டது. மேட்டுப்பாளையத்தில் காலை 9.30 மணிக்கு புறப்பட்டு மதியம் 1.30 மணியளவில் குன்னூர் வந்து சேர்ந்தது. விரைவில் இந்த என்ஜினை இயக்க ரெயில்வே துறையினர் முடிவு செய்துள்ளனர்.

# வருமானத்தை மறைத்ததற்காக அபராதம் விதித்ததை எதிர்த்து விஜய் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு தள்ளிவைப்பு

சென்னை, ஜன.25

நடிகர் விஜய் வீட்டிலும், அலுவலகத்திலும் கடந்த 2015ம் ஆண்டு வருமானவரித்துறை அதிகாரிகள்திடீர்சோதனை நடத்தி ஏராளமான ஆவணங்களை பறிமுதல் செய்தனர். இந்த நிலையில், கடந்த 20152016ம் நிதியாண்டிற்கான வருமானம் 35 கோடியே 42 லட்சத்து 91 ஆயிரத்து 890 ரூபாய் என்று விஜய் கணக்கு காட்டியிருந்தார்.

அந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்ட வருமானவரித்துறைஅதிகாரிகள், 2015ம் ஆண்டு கைப்பற்றிய ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்த்தனர். அப்போது, புலி திரைப்படத்தில் நடிப்பதற்காக அவர் பெற்ற ரூ.15 கோடியை கணக்கில் காட்டவில்லை என்று கண்டுபிடித்தனர்.

இவ்வாறு வருமானத்தை மறைத்ததற்காக விஜய்க்கு ரூ.1 கோடியே 50 லட்சத்தை அபராதம் விதித்து கடந்த 2022ம் ஆண்டு ஜூன் 30ந்தேதி வருமான வரித்துறை உத்தரவு பிறப்பித்தது. இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் நடிகர் விஜய் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, அபராதம் விதித்த வருமான வரித்துறை உத்தரவுக்கு இடைக்கால தடைவிதித்து உத்தரவிட்டது. இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார்ராமமூர்த்தி முன்பு இறுதி விசாரணைக்காக நேற்று வந்தது.

அப்போது விஜய் தரப்பில், “சட்டப்படி அபராத உத்தரவை 2019ம் ஆண்டு ஜூன் 30ந்தேதிக்கு முன்பே பிறப்பித்திருக்க வேண்டும். காலதாமதமாக, சுமார் 3 ஆண்டுகளுக்கு பின்னர் 2022ம் ஆண்டு உத்தரவு பிறப்பித்தது சட்டப்படி தவறு. எனவே, அந்த உத்தரவை ரத்து செய்யவேண்டும்” என்று வாதிட்டார்.

வருமான வரித்துறை தரப்பில், “வருமான வரி மதிப்பீட்டை எதிர்த்த அப்பீல் முடிந்த பின், 6 மாத கால அவகாசத்துக்குள்ளேயேஅபராதஉத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது. வருமான வரிச்சட்டப்படி நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து சரிதான். விஜய் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும்” என்று வாதிடப்பட்டது. இரு தரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதி, வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தார்.

# இந்திய கடலோர காவல்படையின் 50வது நிறுவன தினத்தை முன்னிட்டு 1,500 கி.மீ. மோட்டார் சைக்கிள் பேரணி



சென்னை, ஜன.25

இந்திய கடலோர காவல்படை (ICG) தனது 50வது நிறுவன தினத்தைக் கொண்டாடும் வகையில் 1,500 கி.மீ. மோட்டார் சைக்கிள் பயணத்திற்கு ஏற்பாடு செய்தது. இப்பயணம், கடலோர காவல்படை கிழக்கு மண்டல தலைமையகம், சென்னை சார்பில் 50 கடலோர காவல் படை வீரர்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்டது.

இந்தப் பேரணி தூத்துக்குடி மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய இரு இடங்களில் இருந்து ஒரே நேரத்தில் இரண்டு கட்டங்களாகத் தொடங்கப்பட்டது. ஐந்து நாட்களில் இப்பேரணி சுமார் 1,500 கி.மீ. தூரத்தைக் கடந்து சென்னையில் நிறைவடைந்தது. ஆந்திரப் பிரதேசத்திலிருந்து கிளம்பிய பேரணியை கடலோர காவல்படை ஆந்திரப் பிரதேச மாவட்டத் தளபதி, துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராஜேஷ் மிட்டல் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தூத்துக்குடியிலிருந்து புறப்பட்ட பேரணியை தூத்துக்குடி சுங்கத்துறை ஆணையர் விகாஸ் நாயர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்தப் பேரணிகள் வழியில் காக்கிநாடா, விஜயவாடா, நிஜாம்பட்டினம், கிருஷ்ணபட்டினம், மண்டபம், காரைக்கால் மற்றும் புதுச்சேரி போன்ற முக்கிய கடலோரப் பகுதிகளை கடந்து வந்தன. நிறைவாக இந்தப் பேரணிக்கு சென்னையில் பாரம்பரிய ராணுவ பாணியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பேரணியில் பங்கேற்ற வீரர்களை கிழக்கு மண்டல கடலோர காவல்படைத் தளபதி, இன்ஸ்பெக்டர் ஜெனரல் டி.எஸ்.சைனி கவுரவித்தார். அவர் அனைத்து வீரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சிகளைப் பாராட்டினார்.

இப்பயணம், இந்தியாவின் கடல்சார் நலன்களைப் பாதுகாப்பதிலும், மீனவர்கள் உட்பட கடல் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், இந்திய கடலோர காவல்படை "கடலின் காவலர்களாக" ஆற்றிவரும் பங்கை எடுத்துக் காட்டியது. கடல்சார் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்காக மீனவர்களை ஒருங்கிணைப்பதை ஊக்குவிக்கும் வகையில், பயண வழியில் சமூக கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்தியாவின் செழுமையான கடல்சார் பாரம்பரியம் மற்றும் கடலோரப் பாதுகாப்பு இதில் எடுத்துரைக்கப்பட்டன.

இந்தப் பேரணியின் போது மரம் நடுதல், பெண்கள் பாதுகாப்பு, பெண்கல்வி, தூய்மை இந்தியா இயக்கம் போன்ற தேசிய முயற்சிகள் முன்னிலைப்படுத்தப்பட்டன.

# காதல் திருமணம் செய்த 12வது நாளில் இளம்பெண் தற்கொலை போலீசார் விசாரணை

திருப்பூர், ஜன.25

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள பூமலூர் பகுதியை சேர்ந்தவர் பரமசிவம். இவருடைய மனைவி சித்ரா. இவர்களுடைய மகள் ஜீவிதா(25வயது). இவர், எம்.பி.பி.எஸ். படித்துள்ளார். ஜீவிதாவுக்கும், கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அருகே தென்னமநல்லூர் கள்ளிமேட்டை சேர்ந்த தனியார் நிறுவன ஊழியரானஅபிஷேக்(28வயது) என்பவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. பின்னர் அது காதலாக மாறியது.

இருவரும் தீவிரமாக காதலித்து வந்த நிலையில், கடந்த 11ந்தேதி வீட்டுக்கு தெரியாமல் திருமணம்செய்துகொண்டனர். பின்னர் தான் திருமணம் செய்து கொண்டதாக ஜீவிதா தனது பெற்றோருக்கு தகவல் தெரிவித்துள்ளார். காதல் தம்பதி மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கையை தொடங்கினர்.

ஜீவிதா மருத்துவருக்கு படித்து இருந்தாலும், அவருக்குதகுந்த வேலை கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இது பற்றி அவர் தனது பெற்றோர்மற்றும்தோழிகளிடம் கூறி புலம்பி உள்ளார். அதற்கு அவர்கள் ஆறுதல் கூறி உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் ஜீவிதா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து தகவல் அறிந்த தொண்டாமுத்தூர் போலீசார் விரைந்து சென்று, ஜீவிதாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்துஇதுகுறித்து வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் இது தொடர்பாக கோவை வடக்கு ஆர்.டி.ஓ.வும் விசாரணை நடத்தி வருகிறார். காதல் திருமணம் செய்த 12வது நாளில் பெண் மருத்துவர் தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வழிபாட்டு தல கட்டிடங்களுக்கு கலெக்டரின் அனுமதி தேவை இல்லை என்ற அரசாணைக்கு தடை: மதுரை ஐகோர்ட்டு உத்தரவு



மதுரை, ஜன.25

மதுரையை சேர்ந்த கலாநிதி என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறி இருந்ததாவது:

தமிழ்நாட்டில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாக்க, பிற மத சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் புதிய மத நிறுவனங்கள் நிறுவப்படக்கூடாது என்று நீதிபதி வேணுகோபால் ஆணையம் பரிந்துரைத்தது. அதன் பேரில் மாவட்ட, நகராட்சி கட்டிட விதிகள் சட்டங்களின்படி, பொது வழிபாடு அல்லது மத நோக்கங்களுக்காககட்டிடங்களைகட்டுவதற்கு மாவட்ட கலெக்டரின் முன் ஒப்புதல் கட்டாயமாக தேவைப்பட்டது.

அத்தகைய கட்டுமானம் பொது அமைதியை சீர்குலைக்கும் வகையில் இருந்தால் அனுமதி மறுக்க கலெக்டருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையை ஐகோர்ட்டும், சுப்ரீம் கோர்ட்டும் அங்கீகரித்து உள்ளன.

இந்த நிலையில் சமீபத்தில் மதம் சார்ந்த கட்டிடங்களுக்கு மாவட்ட கலெக்டரின் தடையில்லா சான்று பெறுவது கட்டாயம் இன்றி, திட்ட அனுமதி வழங்கப்படும் என்று தமிழ்நாடு வீட்டு வசதித்துறை சார்பில் அரசாணை வெளியிடப்பட்டது. இந்த அரசாணை ஏற்கனவே உள்ள விதிகளுக்கு எதிரானது.

எனவே வழிபாட்டு தல கட்டிடங்களுக்கு அந்தந்த மாவட்ட கலெக்டரின் தடையில்லாசான்றுதேவையில்லை என விலக்கு அளித்து தமிழக அரசு பிறப்பித்த அரசாணையை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜெயச்சந்திரன், செந்தில்குமார் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மேற்கண்ட அரசாணைக்கு தடை விதித்தும், இந்த வழக்கு குறித்து தமிழ்நாடு வீட்டு வசதித் துறை செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பதில் அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தனர்.

# ஒரு வாரத்தில் திருமணம்.. அழைப்பிதழ் கொடுக்க சென்ற புது மாப்பிள்ளைக்கு நேர்ந்த சோகம்



மதுரை, ஜன.25

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி திருவள்ளுவர் நகரை சேர்ந்தவர் கருப்பையா. இவருடைய மகன் பிரசன்ன வெங்கடேஷ் (26). இவர் பெங்களூருவில் உள்ள ஒருதனியார்நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். இவருக்கு வருகிற 28ந்தேதி திருமணம் நடக்க இருந்தது. திருமண அழைப்பிதழை உறவினர்களுக்கு வழங்கி வந்தார்.

உசிலம்பட்டி பகுதியில் திருமண அழைப்பிதழ் கொடுத்துவிட்டு, வீடு திரும்பியபோது உசிலம்பட்டியில் பேரையூர் ரோட்டில் சென்றபோது எதிரே வந்த வேன் ஒன்று, எதிர்பாராதவிதமாக அவரது பைக் மீது மோதியது. இதில் பிரசன்ன வெங்கடேஷ் சம்பவ இடத்திலேயேபலியானார்.

இதுகுறித்து உசிலம்பட்டி நகர் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். அவரது உடலை பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து தொடர்பாக வேன் டிரைவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். சில தினங்களில் திருமணம் நடைபெற இருந்த நிலையில் நடந்த இந்த துயர சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் விமர்சனத்துக்கு தமிழிசை பதிலடி

பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் ,

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே நீங்கள் ஒரு ட்ரபிள் என்ஜின் (TROUBLE ENGINE) கவர்ன்மென்ட் வைத்துக்கொண்டு எல்லா மாநிலங்களிலும் வெற்றிகரமாக டபுள் இன்ஜின்(DOUBLE ENGINE) கவர்ன்மென்ட் நடத்திக் கொண்டிருக்கும் மோடி அவர்களை விமர்சிக்கிறீர்கள். குஜராத், மகாராஷ்டிரா, உத்தர் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் மாநில அளவில் வெற்றியை தருவது மட்டுமல்லாமல் மாநகராட்சி அளவில் வெற்றியை தந்து அது ட்ரிபிள் என்ஜின் கவர்மெண்டாக போய்க்கொண்டிருக்கிறது.

ஆனால் பஞ்சாயத்து தேர்தலை கூட நடத்த பயந்து தமிழ்நாட்டில் ட்ரபிள் என்ஜின் (TROUBLE ENGINE) கவர்ன்மென்ட் ஆக போதை, கடன், பாதுகாப்பின்மை போன்றவற்றை ஏற்படுத்தி ஓட்டிக்கொண்டு இருக்கும் உங்கள் கவர்ன்மென்ட் போல் அல்லாமல் .. தமிழ்நாட்டில் நல்ல டபுள் இன்ஜின் கவர்மெண்ட் கொண்டுவர வேண்டுமென்றால் அதை "டப்பா இஞ்சின்" என்று விமர்சிக்கிறீர்கள். நீங்கள் தான் "தப்பான இன்ஜினை" வைத்துக்கொண்டு ஓட்டிக் கொண்டிருக்கிறீர்கள் முதல்அமைச்சர் அவர்களே...... தமிழ்நாட்டிற்கு பிரதமர் வந்தவுடனேயே நீங்கள் அடையும் பதற்றம் உங்களது டிவீட்டில் நன்றாகவே தெரிகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

25.01.2026

# வருமானத்தை மறைத்ததற்காக அபராதம் விதித்ததை எதிர்த்து விஜய் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பு தள்ளிவைப்பு

சென்னை, ஜன.25

நடிகர் விஜய் வீட்டிலும், அலுவலகத்திலும் கடந்த 2015ம் ஆண்டு வருமான வரித்துறை அதிகாரிகள்திடீர்சோதனை நடத்தி ஏராளமான ஆவணங்களை பறிமுதல் செய்தனர். இந்த நிலையில், கடந்த 20152016ம் நிதியாண்டிற்கான வருமானம் 35 கோடியே 42 லட்சத்து 91 ஆயிரத்து 890 ரூபாய் என்று விஜய் கணக்கு காட்டியிருந்தார்.

அந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்ட வருமான வரித்துறைஅதிகாரிகள், 2015ம்ஆண்டு கைப்பற்றிய ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்த்தனர். அப்போது, புலி திரைப்படத்தில் நடிப்பதற்காக அவர் பெற்ற ரூ.15 கோடியை கணக்கில் காட்டவில்லை என்று கண்டுபிடித்தனர்.

இவ்வாறு வருமானத்தை மறைத்ததற்காக விஜய்க்கு ரூ.1 கோடியே 50 லட்சத்தை அபராதம் விதித்து கடந்த 2022ம் ஆண்டு ஜூன் 30ந்தேதி வருமான வரித்துறை உத்தரவு பிறப்பித்தது.

இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் நடிகர் விஜய் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, அபராதம் விதித்த வருமான வரித்துறை உத்தரவுக்கு இடைக்காலதடைவிதித்து உத்தரவிட்டது.

இந்த நிலையில், இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு இறுதி விசாரணைக்காக நேற்று வந்தது.

அப்போது விஜய் தரப்பில், "சட்டப்படி அபராத உத்தரவை 2019ம் ஆண்டு ஜூன் 30ந்தேதிக்கு முன்பே பிறப்பித்திருக்க வேண்டும். காலதாமதமாக, சுமார் 3 ஆண்டுகளுக்கு பின்னர் 2022ம் ஆண்டு உத்தரவு பிறப்பித்தது சட்டப்படி தவறு. எனவே, அந்த உத்தரவை ரத்து செய்யவேண்டும்" என்று வாதிட்டார்.

வருமான வரித்துறை தரப்பில், "வருமான வரி மதிப்பீட்டை எதிர்த்த அப்பீல் முடிந்த பின், 6 மாத கால அவகாசத்துக்குள்ளேயே அபராத உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வருமான வரிச்சட்டப்படி நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து சரிதான். விஜய் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்" என்று வாதிடப்பட்டது. இரு தரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதி, வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தார்.

# ரூ.3.44 லட்சம் மதிப்பிலான 500 ரூபாய் கள்ள நோட்டுகள் வைத்திருந்தவர் கைது

தூத்துக்குடி, ஜன.25

தூத்துக்குடி மாவட்டம், புதூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ராஜேஷ் தலைமையில் போலீசார் இன்று காலை ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது புதூர் பகுதியில் உள்ள முருகன் (வயது 55) என்பவருக்கு சொந்தமான மளிகை கடையை சோதனை செய்தனர். அதில் அங்கு தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் சட்ட விரோத விற்பனைக்கு வைத்திருந்தது தெரியவந்தது. இதனையடுத்து மேலும் புகையிலை பொருட்கள் குறித்து அவரது வீட்டை சோதனை செய்ததில் அங்கு சந்தேகப்படும்படி இருந்த பண்டல்களை போலீசார் சோதனை செய்தனர். அதில் மொத்தம் ரூ.3 லட்சத்து 44 ஆயிரம் மதிப்புள்ள 500 ரூபாய் கள்ள நோட்டு கட்டுகள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து புதூர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து முருகனை கைது செய்து அவரிடமிருந்து 500 ரூபாய் கள்ள நோட்டு கட்டுகள் மற்றும் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்சொன்ன வழக்கில் துரித விசாரணை மேற்கொண்டு குற்றவாளியை கைது செய்து கள்ளநோட்டுகள் மற்றும் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து சிறப்பாக பணியாற்றிய புதூர் காவல் நிலைய போலீசாரை தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. பாராட்டினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் இது போன்றுசட்டவிரோதமாககள்ளநோட்டு தயாரித்தல் மற்றும் கள்ளநோட்டு பரிமாற்றத்தில் ஈடுபடுவர்கள், தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# நெல்லையில் சட்ட விரோதமாக மதுபானம் விற்றவர் கைது



திருநெல்வேலி ஜன.25

திருநெல்வேலி மாநகரம் பெருமாள்புரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் எதிரே உள்ள பகுதியில் நேற்று மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்திரா மற்றும் காவல்துறையினர் ரோந்து பணிக்கு சென்றனர். அப்போது அங்கே சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட கங்கைகொண்டானை சேர்ந்த கருப்பையா மகன் ரஞ்சித்குமார் (வயது 46) என்பவரை கைது செய்த போலீசார், அவரிடமிருந்து 28 மது பாட்டில்களை பறிமுதல் செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# 16 வயது சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை: முதியவருக்கு சாகும் வரை சிறை தண்டனை



தூத்துக்குடி மாவட்டம், திரு ச்செந்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2020ம் ஆண்டு 16 வயது சிறுமியை தூத்துக்குடியைச் சேர்ந்த தங்கபாண்டி (வயது 70) என்பவர் பாலியல் வன்கொடுமை செய்தார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர்கள், தங்கபாண்டியிடம் கேட்டபோது தங்கபாண்டியின் மகளான தூத்துக்குடியைச் சேர்ந்த வேதசெல்வி(42) மற்றும் மகனான ராஜா(34) ஆகிய 2 பேரும் சேர்ந்து மேற்சொன்ன பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதுகுறித்து பாதிக்கபட்ட சிறுமியின் பெற்றோர்அளித்த புகாரின்பேரில் திருச்செந்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் போக்சோ மற்றும் கொலை மிரட்டல் வழக்குப்பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கை காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம்IIல் நடைபெற்று வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பிரீத்தா இன்று தங்கபாண்டி குற்றவாளி என உறுதி செய்து, அவருக்கு இயற்கையாக மரணம் ஏற்படும் வரை ஆயுள்தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதமும் குற்றவாளிகள் வேதசெல்வி மற்றும் ராஜா ஆகிய 2 பேருக்கும் தலா ரூ.5 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த திருச்செந்தூர் உட்கோட்ட டி.எஸ்.பி. மகேஷ்குமார், திருச்செந்தூர் அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ரசீதா, திருச்செந்தூர் அனைத்து மகளிர் காவல் துறையினர், இந்த வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் இந்திரா, நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் சேவியர் ஞானப்பிரகாசம் ஆகியோரை தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# இன்றைய ராசி பலன்கள் (25.01.2026)

**மேஷம்:** இன்று பொறுமை தேவைப்படும் நாள். பேச்சில் நிதானம் இருந்தால் குடும்பத்தில் குழப்பங்களைத் தவிர்க்கலாம். வாகனப் பயணங்களில் எச்சரிக்கை அவசியம்.

**ரிஷபம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். கணவன்மனைவி இடையே ஒற்றுமை பலப்படும்.

**மிதுனம்:** நினைத்த காரியங்கள் தடையின்றி முடியும். பணியிடத்தில் உங்கள் திறமைக்குஅங்கீகாரம்கிடைக்கும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும்.

**கடகம்:** அலைச்சல்கள் அதிகமாக இருந்தாலும், மாலை நேரத்தில் மனநிம்மதி கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படலாம், சிக்கனம் தேவை.

**சிம்மம்:** உறவினர்களிடையே மதிப்பு உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அமையும். புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும்..

**கன்னி:** அலுவலகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். கடன் சுமைகள் குறையத் தொடங்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**துலாம்:** உற்சாகமான நாள். திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை சேரும்.

**விருச்சிகம்:** மனதில் சிறு குழப்பங்கள் வந்து செல்லும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். அமைதியாக இருந்தால் நன்மைகள் தேடி வரும்.

**தனுசு:** துணிச்சலான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். சகோதர வழியில் அனுகூலம் உண்டாகும். வெளியூர் பயணங்கள் நன்மையளிக்கும்.

**மகரம்:** பேச்சால் காரியங்களைச் சாதிப்பீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும்.

**கும்பம்:** தடைபட்ட காரியங்கள் இன்று கைகூடும். செல்வாக்கு உயரும் நாள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.

**மீனம்:** வேலைப்பளு அதிகமாகத் தோன்றும். எதிலும் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துச் செயல்படுவது நல்லது. தியானம் மன அமைதி தரும்.

# உல்லாசத்திற்கு ஆசைப்பட்டு.. பணம் கொடுத்து ஏமாந்த வாலிபர்கள்...இளம்பெண் கைது

நாகர்கோவில், ஜன.25

சமூக வலைதளங்களில் ஆபாச உரையாடலுக்கும், உடலுறவுக்கும் அழைப்பு விடுத்து வாட்ஸ்அப் எண் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த எண்ணில் பேசிய பெண் ஒருவர் நீங்கள் இளம்பெண்ணுடன் உல்லாசமாக இருக்கலாம். ஆபாச வீடியோ கால் மற்றும் ஆபாச சேட்டிங் செய்யலாம் என ஆசைவார்த்தை கூறியுள்ளார். அதனை நம்பி பல வாலிபர்கள் பணம் கொடுத்து ஏமாந்துள்ளனர்.

இளம்பெண்களுடன் உல்லாசமாக இருக்கலாம் என ஆசைவார்த்தை கூறி ஏமாற்றிய நபர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுக்கப்பட்டது. இந்த புகாரின் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து குற்றவாளியை கண்டறிந்து கைது செய்ய மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் உத்தரவிட்டார். அதன்படி சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து குற்றவாளியை கைது செய்யும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் போலி முகநூல் ஐ.டி. மூலம் உல்லாசமாக இருக்கலாம் என பணம் பறித்து ஏமாற்றிய ராமநாதபுரம் பகுதியை சேர்ந்த நபிலா பேகம் (வயது 27) என்பவரை கைது செய்தனர்.

இது குறித்து சைபர் கிரைம் போலீசார் கூறியதாவது:

பேஸ்புக் ஐ.டி. பயன்படுத்தி ஆபாச சாட்டிங் மற்றும் வயதிற்கு ஏற்ற பெண்கள் தனித்தனியாக ரேட் எனக் குறிப்பிட்டு ஆபாச உரையாடலுக்கும், உடலுறவுக்கும் அழைப்பு விடுத்து வாட்ஸ்அப் எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த எண்ணில் பேசும் பெண் ஒருவர் நீங்கள் இளம்பெண்ணுடன் உல்லாசமாக இருக்கலாம். ஆபாச வீடியோகால் மற்றும் ஆபாச சேட்டிங் செய்யலாம் என ஆசை வார்த்தை கூறுவார். அதனை நம்பி பலரும் பணம் கொடுத்து ஏமாந்துள்ளனர். இது தொடர்பான புகாரின் பேரில் இளம்பெண் ஒருவரை கைது செய்து உள்ளோம்.

இளம்பெண்களுடன் வீடியோ கால் செய்ய தனி ரேட், வீடியோ காலில் ஆடையின்றி நிர்வாணமாக நின்று பேச தனி ரேட், ஆபாச சாட்டிங் செய்ய தனி ரேட், உல்லாசமாக இருக்க தனி ரேட் என கூறி பணம் வசூலித்து ஏமாற்றி உள்ளனர் என தெரிவித்தனர்.

# ஆரி அர்ஜூனனின் "போர்த் ப்ளோர்" திரைப்படத்தின் ரிலீஸ் அப்டேட்




தமிழ் திரையுலகில் எந்தவித சினிமா பின்புலமும் இல்லாமல், சாதித்த நடிகர்களில் ஆரியும் ஒருவர். 'நெடுஞ்சாலை', 'தரணி', 'மாயா', 'உன்னோடு கா', 'முப்பரிமாணம்', 'நாகேஷ் திரையரங்கம்', 'நெஞ்சுக்கு நீதி', 'எல்லாம் மேல இருக்குறவன் பாத்துப்பான்' போன்ற பல படங்களில் நடித்துள்ளார். 'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் வெற்றிபெற்று மேலும் பிரபலமானார். விஜய் மில்டன் இயக்கத்தில் 'கோலிசோடா 3' படத்தில் நடித்துள்ளார்

மனோ கிரியேஷன் சார்பில் தயாரிப்பாளர் ஏ. ராஜா தயாரிப்பில், எல்.ஆர். சுந்தரபாண்டி இயக்கத்தில், நடிகர் ஆரி அர்ஜூனன் கதாநாயகனாக நடிக்க, வித்தியாசமான களத்தில் பரபரப்பான திரில்லராக உருவாகியுள்ள 'போர்த் ப்ளோர்' திரைப்படம், வரும் பிப்ரவரி மாதம் இறுதியில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

சென்னையின் மையப்பகுதி ஒன்றில், ஒரு குடியிருப்பில் நடக்கும் பரபரப்பான சம்பவங்கள் தான் இப்படத்தின் கதை. அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பை எகிற வைக்கும் வகையில், ஆச்சரியப்பட வைக்கும் திருப்பங்களுடன், இதுவரை பார்த்திராத திரில்லர் அனுபவத்தை தரும் வகையில், இப்படத்தின் திரைக்கதையை அமைத்துள்ளார் இயக்குநர் சுந்தரபாண்டி. சைக்காலஜிகள் திரில்லராக உருவாகியுள்ள இந்த திரைப்படம், கனவுகளுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பினை எதார்த்தமாக சொல்லுகிறது.

இப்படத்தின் படப்பிடிப்பு சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் நாயகனாக நடிகர் ஆரி அர்ஜூனன் நடிக்கிறார், தீப்ஷிகா நாயகியாக நடிக்கிறார். இவர்களுடன் பவித்ரா, இயக்குநர் சுப்ரமணிய சிவா, தலைவாசல் விஜய், ஆதித்யா கதிர் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கிறார்கள்.

"போடா போடி" படப்புகழ் இசையமைப்பாளர் தரண் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். போடா போடி, வெண்ணிலா கபடி குழு படங்களின் ஒளிப்பதிவாளர் லக்ஷ்மன் ஒளிப்பதிவு செய்துள்ளார். அநீதி, ஜெயில் மற்றும் மத்தகம் வெப் சீரிஸிற்கு கலை இயக்கம் செய்த சுரேஷ் கல்லேரி கலை இயக்கம் செய்கிறார்.

இப்படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நிறைவடைந்து, விரைவில் இசை மற்றும் டிரெய்லரை வெளியிட படக்குழு திட்டமிட்டு வருகிறன்றனர். இப்படம் வரும் பிப்ரவரி மாத இறுதியில் திரைக்கு வருகிறது.

# வடிவுக்கரசி நடித்த "க்ராணி" படத்தின் டிரெய்லர் வெளியானது




நகுல், பாக்யராஜ், நீது சந்திரா மற்றும் ஆஷ்னா ஜவேரி ஆகியோர் நடிப்பில் 2017ம் ஆண்டு வெளியான 'பிரம்மா.காம்' படத்தை இயக்கிய விஜயகுமாரன் தற்போது இயக்கி உள்ள படம் 'க்ராணி'. இப்படத்தில் பழம்பெரும் நடிகை வடிவுக்கரசி முதன்மை கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் சிங்கம் புலி, திலீபன், ஜீவி அபர்ணா, கஜராஜ், ஆனந்த் நாக் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு சீ.டா. பாண்டியன் இசையமைத்துள்ளார். ஹாரர் திரில்லராக உருவாகி உள்ள இந்த திரைப்படத்தை விஜயா மேரி யுனிவர்சல் மீடியா'ஸ் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் விஜயா மேரி தயாரித்து உள்ளார். இப்படம் தொடர்பாக ஏற்கனவே வெளியான பர்ஸ்ட் லுக் போஸ்டர் ரசிகர்களின் கவனத்தை பெற்றது. இப்படத்திற்கு 'யு/ஏ' தணிக்கை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 'க்ராணி' டத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படம் வருகிற 30ந்தேதி முதல் திரையரங்குகளில் வெளியாகிறது.

# கேரள இலக்கிய திருவிழா விண்வெளி வீராங்கனையுடன் நடிகை பாவனா

நாசாவின் முன்னாள் விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் கேரளத்தில் நடைபெற்ற கேரள இலக்கியத் திருவிழாநிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் நடிகை பாவனாவும் கலந்துகொண்ட நிலையில், அவர்கள் இருவரும் ஒன்றாக இருக்கும் படங்கள் வெளியாகி வரவேற்பைப் பெற்றுள்ளன.

இது குறித்து தமது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ள பாவனா, "உத்வேகமளிக்கக்கூடிய சாதனையாளர்களுடன் மேடையில் ஒருங்கே இருக்கும் பாக்கியம் எமக்குக் கிடைத்ததற்கு நன்றி என்றும் இது தமது வாழ்நாள் மாற்றத்திற்கானதொரு தருணம்" என்று குறிப்பிட்டு மகிழ்ச்சியை பகிர்ந்துள்ளார்.

இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (60), நாசாவில் 27 ஆண்டுகால பணிக் காலத்தில் 608 நாள்கள் விண்வெளியில் தங்கி வரலாற்றுச் சாதனைக்குச் சொந்தக்காரராவார். அவர் கடந்த ஆண்டு டிசம்பர்27ஆம் தேதி முதல் ஓய்வுபெற்றது குறிப்பிடத்தக்கது.

கேரள இலக்கியத் திருவிழாவில் பங்கேற்க சுனிதா வில்லியம்ஸ் மட்டுமில்லாது நோபல், புக்கர் பரிசு வென்றவர்கள் உள்பட சர்வதேச அளவில் சுமார் 500 பேச்சாளர்கள் அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# 20 ஓவர் உலக கோப்பையில் ஆடாவிட்டால் வங்காளதேசத்துக்குதான் நஷ்டம் அசாருதீன்



20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்காக இந்தியாவுக்கு வந்து விளையாடமாட்டோம் என்று வங்காளதேசம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இதன் காரணமாக, அந்த அணிக்கு பதிலாக ஸ்காட்லாந்து மாற்று அணியாக சேர்க்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், 20 ஓவர் உலகக் கோப்பையில் விளையாட இந்தியாவுக்கு வர மறுத்தால், வங்காளதேசத்துக்குத்தான் நஷ்டம் என இந்திய அணியின் முன்னாள் கேப்டன் முகமது அசாருதீன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:–

இந்தியாவில் பாதுகாப்பு குறைபாடு இருப்பதாக வங்காளதேசம் கூறுவதன் காரணம் என்னவென்று புரிந்து கொள்ள முடியவில்லை. தற்போது நியூசிலாந்து அணி இந்தியாவில் 20 ஓவர் தொடரில் விளையாடி வருகிறது. அதற்கு முன்பு தென் ஆப்பிரிக்க அணியும் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. இந்த அணிகளில் எதுவும் இந்தியாவில் பாதுகாப்பு குறைபாடு இருப்பதாக புகார் தெரிவிக்கவில்லை. இந்தியா வீரர்கள் அனைவருக்கும் மிகவும் பாதுகாப்பான சூழலை வழங்கும் நாடாகும்.

20 ஓவர் உலகக் கோப்பை போட்டிக்காக வங்காளதேச அணி இந்தியாவுக்கு வர மறுத்தால், அதனால் ஏற்படும் நஷ்டம் வங்காளதேச அணிக்குத்தான். உலகக் கோப்பை போட்டிகள் நடைபெறும் இடங்களை தொடர்ச்சியாக மாற்றிக்கொண்டே இருக்க முடியாது. போட்டிகளுக்கான அட்டவணை ஏற்கனவே தயாராகிவிட்ட நிலையில், இடமாற்றம் செய்வது மிகவும் கடினம். இவ்வாறு முகமது அசாருதீன் தெரிவித்துள்ளார்.

# ஒரு நாள்... என் சாதனையை இந்த வீரர் முறியடிப்பார்; பி.சி.சி.ஐ. துணை தலைவர் கேள்விக்கு சச்சின் பதில்




பி.சி.சி.ஐ. அமைப்பின் துணை தலைவர் ராஜீவ் சுக்லா ஒரு நாள் சச்சின் தெண்டுல்கரின் வீட்டுக்கு சென்றுள்ளார். இருவரும் பேசியபடி இருந்தனர். பின்னர் ஒன்றாக மதிய உணவு சாப்பிட்டுள்ளனர். அப்போது, சச்சினிடம் சுக்லா, நிறைய சாதனைகளை படைத்திருக்கிறீர்கள். அதனை யாரேனும் முறியடிப்பார்கள் என நினைக்கிறீர்களா? என்றார்.

அதற்கு சச்சினோ, சாதனைகளை படைப்பதே அவற்றை முறியடிப்பதற்காகதான். அதனால், என்னுடைய சாதனை முறியடிக்கப்படும் என்றார். அப்படியானால், அது யாராக இருக்கும்? என நீங்கள் நினைக்கிறீர்கள் என சுக்லா விடாமல் கேட்டுள்ளார். அதற்கு சாப்பிட்டு கொண்டே சச்சின், என் சாதனைகளை விராட் கோலி முறியடிப்பார் என நான் நினைக்கிறேன் என்றார்.

கிரிக்கெட்டின் அனைத்து வடிவிலான ஆட்டங்களிலும் விளையாடி 664 போட்டிகளில் 34 ஆயிரத்து 357 ரன்களையும், 100 சதங்களையும் சச்சின் அடித்துள்ளார். தவிர 164 அரை சதங்களும் இவருடைய சாதனைகளில் அடங்கும். மும்பையில், அவருடைய சொந்த மண்ணில் 2011ம் ஆண்டு இலங்கையை வீழ்த்தி உலக கோப்பை கனவையும் பூர்த்தி செய்திருக்கிறார்.

டெஸ்ட் விளையாட்டில் 200 போட்டிகளில் ஆடி 15 ஆயிரத்து 921 ரன்களையும், 51 சதங்களையும் அவர் சேர்த்திருக்கிறார். ஒரு நாள் போட்டி தொடரில் 463 போட்டிகளில் ஆடி 18 ஆயிரத்து 426 ரன்களையும், 49 சதங்களையும் அவர் அடித்திருக்கிறார்.

இதில், விராட் கோலி 559 சர்வதேச போட்டிகளில் விளையாடி 85 சதங்களுடன் 28,215 ரன்களை சேர்த்திருக்கிறார். சச்சினின் சாதனையை நெருங்க கோலிக்கு 15 சதங்கள் தேவையாக உள்ளன. சச்சினின் சாதனையை முறியடிக்க கோலிக்கு 16 சதங்கள் தேவையாக உள்ளன.

ஏற்கனவே ஒரு நாள் போட்டி தொடரில் 54 சதங்கள் அடித்து, சச்சினின் சாதனையை கோலி முந்தியுள்ளார். உலக கோப்பையில் சிறந்த வீரர் என சச்சின் (673 ரன்கள்) படைத்த சாதனையை, 2023 உலக கோப்பை போட்டி தொடரில் கோலி (765 ரன்கள்) முறியடித்து உள்ளார். 2027ம் ஆண்டு வரை கோலி விளையாடுவார் என கூறப்படுகிற சூழலில், சச்சினின் கணிப்பு பலிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066